# ஆரம்பப் பிரிவு மாணவர்களின் மொழித்திறனை விருத்தி செய்வதில் ஆசிரியர்களின் பங்களிப்பும், எதிர்நோக்கும் சவால்களும் - வாகரைக் கோட்டம், ஓர் ஆய்வு

Balasundaram Soba
Department of Education and Child Care, Eastern University of Sri Lanka.
balasundramsobana@gmail.com

**ஆய்வுச் சுருக்கம்**

ஒரு பிள்ளையின் கல்வி விருத்திக்கு அடிப்படையாக அமைவது ஆரம்பக் கல்வியும், அதனோடிணைந்த மொழி விருத்திச் செயற்பாடுகளுமாகும். பிள்ளையின் வளர்ச்சியில் கல்விக்கான அடித்தளத்தை ஏற்படுத்திக் கொடுப்பதோடு, முறைசார் கல்வியின் அத்திவாரமாகவும் ஆரம்பக்கல்வி விளங்குகின்றது. ஆய்வுக்கெனத் தெரிவுசெய்யப்பட்ட பாடசாலை மாணவர்களின் மொழித்திறன் சார்பான பிரச்சினைகள் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகளில் பெரும் தாக்கம், பாதிப்புக்களைச் செலுத்துகின்றன. மொழித்திறன் தொடர்பாக மாணவர்களிடம் எவ்வாறான பிரச்சினைகள் காணப்படுகின்றன, மொழித்திறன் பின்தங்கியிருப்பதற்கான காரணங்கள், மொழித்திறனை விருத்தி செய்யும் வகையில் பாடசாலைகளில் ஆசிரியர்கள் செயற்றிட்டங்களையும், செயற்பாடுகளையும் முன்னெடுக்கும்போது எவ்வாறான சமூகப் பொருளாதார போக்குவரத்துப் பிரச்சினைகளுக்கு முகம் கொடுக்கின்றனர் என்பவற்றைக் கண்டறியும் பொருட்டு மட்டக்களப்பு மாவட்டத்தின் யுத்தம், இயற்கை அனர்த்தங்களால் பாதிக்கப்பட்டு கல்வியில் பின்தங்கிய நிலையிலுள்ள வாகரைப் பிரதேசத்திற்குட்பட்ட எட்டுப் பாடசாலைகளை அடிப்படையாகக் கொண்டு இவ்வாய்வு மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வாய்வானது கற்றல் கற்பித்தல் செயற்பாட்டை மேம்படுத்துவதாகவும், மொழித் திறனை விருத்தி செய்வதற்கு வழியை ஏற்படுத்திக் கொடுப் பதாகவும் அமைந்துள்ளது. இம்மாணவர்களின் மொழித் திறனை விருத்தி செய்வதில் ஆசிரியர்களின் பங்கு பிரதான மானதாகும். ஆசிரியர்கள் மாணவர்களின் மொழித்திறனை அதிகரிக்கும் வகையில் அர்ப்பணிப்புடனும், சேவை மனப்பாங்குடனும் செயற்படுவதன் அவசியத்தையும் இவ்வாய்வானது எடுத்துக் காட்டுகின்றது. பாடசாலையின் பெரும்பாலான மாணவர்களிடத்தில் தெளிவற்ற எழுத்து வாசிப்பு முறை, உச்சரிப்புப் பிரச்சினைகள், எழுத வாசிக்கத் தெரியாமை, இலக்கண ரீதியான தவறுகள், போன்றவாறான மொழித்திறன் குறைபாடுகள் அதிக மாகவே காணப்படுகின்றமை ஆய்வின் மூலம் கண்ட றியப்பட்டுள்ளது. அதிபர், ஆசிரியர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள், மாணவர்கள் போன்றோர்களிடமிருந்து வினாக்கொத்து, நேர்காணல் கலந்துரையாடல் போன்றவற்றின் மூலம் பெறப்பட்ட தரவுகளிலிருந்து தீர்வாலோசனைகள் முன்வைக்க ப்பட்டுள்ளன. இவ்வாய்வின் மூலம் மாணவர்களை தொடந் தேர்ச்சியாக கற்றல் செயற்பாட்டுக்கு வழிப்படுத்துவதுடன் பிரதேச ரீதியான அபிவிருத்தியைத் துரிதப்படுத்தவும் முடியும்.

**திறவுச் சொற்கள்-** கல்வி அபிவிருத்தி, ஆசிரியர்களின் பங்களிப்பு, அர்ப்பணிப்பு, ஆரம்பப் பிரிவு மாணவர்கள்.

## 1. ஆய்வு அறிமுகம்

ஒரு பிரதேசத்தின் அபிவிருத்திக்கும் மேம்பாட்டுக்கும் உந்து சக்தியாக அமைவது கல்வி என்பதை எவரும் மறுக்க முடியாது. ஒரு பிள்ளை தன் வாழ்நாளில் கற்றுக் கொள்ளும் சகல கல்விச் செயற்பாட்டுக்கும் அத்திவாரமாக அமைவது ஆரம்பக் கல்வியாகும். பிள்ளையின் வளமான எதிர்காலம் அவன் பெற்றுக்கொள்ளும் கல்வியின் தரத்திலேயே தங்கியுள்ளது. சிறப்பான தொழிலை நோக்கி மட்டுமன்றி சுறுசுறுப்பானதும், பூரணமானதுமான வாழ்க்கை ஒன்றி னை நோக்கி அதிமுக்கியமான காலடிகள் இங்கு தான் எடுக்கப்படுகின்றன [1]. ஆரம்பநிலைக்கல்வி வருட ங்களே முழுப்பாடசாலை வாழ்க்கையில் மிக முக்கியமான காலப்பகுதியாக விளங்குகின்றது.

எழுதுதல், வாசித்தல், பேசுதல் போன்றவற்றில் ஏதாவது ஒரு குறைபாட்டைக் கொண்டிருக்கும் மாணவர்கள் மொழித்திறனில் குறைபாடுடைய மாணவர்களாகவே கருதப்படுகின்றனர். மாணவர்கள் ஆரம்பவகுப்புக்களி லிருந்தே மொழித்திறனை விருத்திசெய்து கொள்வ தினூ டாகவே அடைவுமட்டவிருத்தி, கற்றற் செயற்பாடுகள் போன்றவற்றில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதோடு, தொடர்ச்சியான கல்வி விருத்தியை ஏற்படுத்தவும் முடியும். பாடசாலைகளின் அபிவிருத்திகளினூடாக பிரதேசத்தின் அபிவிருத்தியை ஏற்படுத்தி மாறும் உலகில் சவால்களை எதிர் கொள்ளவும் அவற்றை வெற்றிகரமாக ஆக்கிக் கொள் வதற்கும் ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மொழித்திறன் விருத்தி அடிப்படையாக அமைகின்றது.

## 2. ஆய்வுப்பின்னணி

பெரும்பாலான மாணவர்கள் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில் கற்றலில் ஆர்வமின்றிக் காணப்படுவதோடு, பாடசாலைக்கு வருகை தராமல் வீட்டில் இருத்தல், பாடசாலைகளில் மொழித்திறன் விருத்தியைச் சிறப்பாக மேற்கொள்ளப் போதியளவு பௌதீக வளங்கள் இல்லாமை, குறிப்பாக பெற்றோர்கள் மாணவர்களின் எழுத்து, வாசிப்புத் தொடர்பாக அக்கறை செலுத்தாமை, இப்பிரதேசத்தில் முன்பள்ளிக் கல்வியை வழங்கும் முன்பள்ளிக் கல்வி நிலையங்கள் குறைந்தளவே காணப்படல், மாண வர்களிடம் ஆரம்ப மொழிவிருத்தி தொடர்பான அறிவு இல்லாமை, வீடுகளில் கற்பதற்கான சூழல் இல்லாமை, ஆசிரியர்கள் தங்கி நின்றோ அல்லது பாடசாலை முடிந்த பிற்பாடோ தொடர்ச்சியாகச் செயற்பாடுகளை மேற்கொள்ள முடியாமை, போக்குவரத்துப் பிரச்சினை போன்ற பல பின்னணிகளின் அடிப்படையில் இவ்வாய்வுத் தலைப்பு தெரிவு செய்யப்பட்டுள்ளது. இந்தவகையில் குடும்பப் பின்னணி, பாடசாலைப் பின்னணி, மாணவர்களின் செயற்பாடுகள், யுத்தம், இயற்கையனர்த்தப் பாதிப்பு, போன்ற பல்வேறு பின்னணிகள் காரணமாகின்றன. பிள்ளைகளின் மொழித்திறன்விருத்தி குறைவானது பாட சாலை, பிரதேச அபிவிருத்திகளை ஒட்டு மொத்தமாகவே பாதிப்படையச் செய்கின்றது.

## 3. ஆய்வுக்குரிய நியாயப்பாடு

வகுப்பறைக் கற்றல் கற்பித்தல் செயற்பாடுகள் வினைத் திறன் மிக்கதாக அமைவதற்கு மொழித்திறன் தேர்ச்சிகள் முக்கிய இடத்தைப் பெறுகின்றன. எழுதுதல், வாசித்தல் கேட்டல், எண்ணுதல் போன்றவற்றின் அவசியத்தை மாணவர்களுக்கும், ஆசிரியர்களுக்கும் புலப்படுத்த வேண்டியுள்ளதோடு, அனைத்துப் பிள்ளைகளுக்கும் மொழித்திறன் விருத்தியைப் பெற்றுக் கொடுக்க வேண்டிய தேவைப்பாடுள்ளது.

எழுதுதல், வாசித்தல் கேட்டல் தொடர்பான மொழி விருத்திகளைப் பெற்றுக்கொள்வதில் மாணவர்கள் எதிர்நோக்கும் இடர்பாடுகளையும், இவ்வாறு மாணவர்கள் இடருறுவதற்குக் குடும்பச் சூழல், பெற்றோர்கள் எவ்வாறு காரணமாகின்றனர், மொழித்திறன் விருத்தியை ஏற்ப டுத்தும் வகையில் அதிபர், ஆசிரியர்கள், பங்களிப்பு செய்யும் போது எவ்வகையான பிரச்சினைகளுக்கும், சவால்களு க்கும் முகம்கொடுக்கின்றனர் என்பதைக் கண்டறிய இப் பிரதேசத்திற்கு இவ்வாய்வு அவசியமாகின்றது.

ஆரம்பநிலை மொழிவிருத்தியே தொடர்ந்து வரும் வாழ்நாள் கல்விக்கு அத்திவாரமாக அமைவதோடு, தொடர்ச்சியாக கல்வி வளர்ச்சிக்கு வித்திடுகின்றது. மாணவர்களின் மொழித்திறன் விருத்தியை மேம்படுத்து வதினூடாக இப்பிரதேசத்தைக் கல்வியில் உயர்ந்த சமூக மாக்கும் வகையிலும் அதற்கான உதவிகளை உரிய கல்வி அதிகாரிகளிடமிருந்து பெற்றுக் கொடுப்பதாகவும் இவ்வாய்வு முக்கியத்துவமுடையதாகவுள்ளது.

மேலும் மொழித்திறன் விருத்தியின்மையானது பிள்ளைகளின் தொடர்ச்சியான கற்றல் கற்பித்தற் செயற் பாடுகளில் தாக்கத்தை ஏற்படுத்துவதுடன் அவர்களு டைய அறிவு, திறன் விருத்தியிலும் பாதிப்பை ஏற்படுத் துகின்றமையினால் பிள்ளையின் ஆரம்ப நிலையிலேயே வீடுகளில் மொழித்திறனை விருத்தி செய்யும் வகையில் இவ்வாய்வு முக்கியத்துவமுடையதாகும்.

## 4. ஆய்வு நோக்கம்

மொழித்திறன் விருத்தியின்மையால் கற்றலில் இடர்படும் மாணவர்களைக் கண்டறிதல்.

இம்மாணவர்கள் வகுப்பறைச் செயற்பாடுகளில் எதிர் கொள்ளும் சவால்களைக் கண்டறிதல்.

இம்மாணவர்களின் மொழித்திறன் பின்னடைவிற் கான காரணங்களைக் கண்டறிதல்.

மாணவர்களின் மொழித்திறன் தொடர்பாக பாடசாலை எந்தளவிற்குப் பங்களிப்புச் செய்கின்றது என்பதை அறிதல்.

பிள்ளைகளின் கற்றல் தொடர்பாக பெற்றோரின் பங்க ளிப்பு எத்தகையது என்பதை இனங்காணுதல்.

மொழித்திறனை விருத்தி செய்வதற்கான இலகுவான வழிமுறைகளைக் கண்டறிந்து தீர்வாலோசனைகளை முன்வைத்தல்.

**5. ஆய்வுப்பிரச்சினை**

மாணவர்களில் பெரும்பாலானோர் எழுத வாசிக்கத் தெரியாத நிலையில், கற்றலில் ஆர்வமின்றிக் காணப்படல்.

ஆரம்பக் கல்வியில் மொழி விருத்தியின் முக்கியத்துவம் பற்றி தெரியாதவர்களாக பெற்றோர், சமூகம் காணப்படல்

வீடுகளில் மொழிவிருத்திக்கான பயிற்சிகள் பெற்றோர் களால் வழங்கப்படாமை.

வீட்டில் கற்பதற்கான வாய்ப்பான சூழல் அமையா மையும், பெற்றோர் ஆரம்பக் கல்வி தொடர்பாக அக்கறை செலுத்தாமையும்.

பாடசாலைகளில் மொழிவிருத்திச் செயற்பாடுகளுக் ஸ்ரீகான பொருத்தமான சூழல் காணப்படாமை,

கற்பித்தல் துணைச் சாதனங்கள், போதுமான இட வசதிகள் பேச்சு, எழுத்து, வாசிப்புத்திறன்களை விருத்தி செய்யும் வகையிலான நூல்கள், நூலகவசதி போன்றன இல்லாமை.

தெளிவற்ற எழுத்து, வாசிப்பு முறை, உச்சரிப்புப் பிரச்சினைகள், உறுப்பமைய எழுதாமை, இலக்கண ரீதி யான தவறுகள், வாசிக்கும் போதும், எழுதும் போதும் சில எழுத்துக்களின் வேற்றுமைகளை அறிய முடியாதுள்ளமை.

**6. இலக்கிய மீளாய்வு**

இவ்வாய்வினை மேற்கொள்வதற்காக இலக்கிய மீளாய்வுச் செயற்பாடானது ஆய்வுத் தலைப்புடன் தொடர்புபட்ட நூல்கள், கட்டுரைகள், சஞ்சிகைகள், வாழ் வியற் களஞ்சியங்கள், குறிப்புக்கள், சுற்றறிக்கைகள் மற்றும் பல்வேறு ஆவணங்கள் என அனைத்து வெளி யீடுகளையும் தேடிக்கண்டுபிடித்து பல்வேறு தலைப்பு க்களில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. அந்தவகையில் ஆரம்பக்கல்வி, ஆரம்பக்கல்வியின் முக்கியத்துவம், மொழித்திறன் வளர்ச்சி பற்றிய இலக்கிய மீளாய்வுச் செயற் பாடானது சஞ்சிகைகள், அவை தொடர்பான நூல்களி லுருந்து பெறப்பட்டன.

ஆரம்பக்கல்வி இன்று பிள்ளைகளின் அடிப்படை உரிமையாக வலியுறுத்தப்படுகின்றது. வளர்முக நாடு களில் அரசியல் சட்டங்களும், கல்விச் சட்டங்களும் இத னை வலியுறுத்துகின்றன [1].

இதேபோல் ஆசிரியர் என்பவர்கள் எவ்வாறான இயல்புகளைக் கொண்டிருக்க வேண்டும், இலங்கையில் ஆசிரியர் தொழில் பெறும் முக்கியத்துவம், ஆசிரியர்களின் வாண்மைத்துவம், ஆசிரியர்களின் வகிபங்கு, வினைத் திறனான கற்பித்தலில் ஆசிரியர்களின் பங்களிப்பு, ஆசிரி யர்களின் அறைகூவல்களும் பிரச்சினைகளும், வகுப் பறை மட்டப் பிரச்சினைகள், பௌதீகப் பிரச்சினைகள் போன்ற பல்வேறு விடயங்கள் யாவும் சஞ்சிகைகள், வாழ்வியற்களஞ்சியம் அவை தொடர்பான நூல்களிலி ருந்தும் பெற்றுக்கொள்ளப்பட்டுள்ளது.

ஆசிரியர்கள் மரபு ரீதியாக ஏற்று வந்த வகிபங்குகளுடன் பல புதிய வகிபங்குகளையும் பொறுப்புக்களையும் ஏற்று வினைத்திறனுடன் கூடியவர்களாகச் செயற்பட வேண்டிய தொழிற்தகைமைகளைப் பெற்றுக்கொள்ளுதல் இன்றி யமையாதது [2]. நாட்டினது அரசியல், சமூகம், மற்றும் அடிக்கடி மாற்றம் பெறும் கல்வித்திட்ட நடைமுறையினால் ஆசிரியர் தன்னைத் தயார்படுத்துவதிலும் பொருத்தப்பாடு அடைவதிலும் சிக்கல் தன்மையை எதிர்கொள்கின்றனர் [3]. இவ்வாறான விடயங்கள் இலக்கிய மீளாய்வுச் செயற் பாடாக இடம் பெற்றன.

**7. ஆய்வு முறையியலும் தரப்பகுப்பாய்வும்**

ஆய்வு முறைமை சிறப்பாகக் காணப்படும் பட்சத் திலேயே தீர்வுகள் நம்பகத் தன்மையானதாக காணப்படும். இந்தவகையில் இவ்வாய்வு அளவைநிலை ஆய்வாக வடிவமைக்கப்பட்டுள்ளது.

**தரவு சேகரித்தல் கருவிகளும், நுட்பங்களும்**

ஆய்வின் வெற்றியானது சேகரிக்கப்படும் தரவுகள், தகவல்களின் வகை, தரம் என்பனவற்றில் தங்கியுள்ளது [4] . இவ்வாய்வினை மேற்கொள்வதற்குப் பின்வரும் தரவு சேகரித்தற் கருவிகள் பயன்படுத்தப்பட்டுள்ளன. அவையாவன வினாக்கொத்து , நேர்காணல், கலந்து ரையாடல், ஆவணங்கள் ஆகிய கருவிகள் செப்பமாக வடிவமைக்கப்பட்டன.

**ஆய்வுக் குடித்தொகையும், மாதிரியும்.**

ஆய்வுப் பிரதேசமானது 20 பாடசாலைகளைக் கொண்டுள்ளபோதிலும் வகை III ஐச் சேர்ந்த எட்டுப் பாடசாலைகள் ஆய்வு மாதிரியாகத் தெரிவுசெய்யப்பட்டன.

**Table 1** School chosen for research

| பாடசாலையின் பெயர் | வகை | மாணவர்களின் எண்ணிக்கை | ஆசிரியர்களின் எண்ணிக்கை |
|---|---|---|---|
| Bt/Kk/Kandalady Arunthathy Vidyalayam | III | 144 | 7 |
| Bt/Kk/Uriyankaddu G.T.M.S. | III | 103 | 4 |
| Bt/Kk/Kirimichodai G.T.M.S | III | 21 | 2 |
| Bt/Kk/Thaddumunai Manikka Vinayagar Vidyalayam | III | 158 | 6 |
| Bt/Kk/Ralodai Thiruvalluvar Vidyalayam | III | 76 | 4 |
| Bt/Kk/Kokuvil G.T.M.S. | III | 42 | 4 |
| Bt/Kk/Kathiravely Junior School | III | 405 | 12 |
| Bt/Kk/Omadiyamadu Velamugan Vidyalayam | III | 25 | 2 |

Source: Zonal Education Office, Valaichchenai.

தெரிவுசெய்யப்பட்ட 8 பாடசாலைகளும் ஆய்வுக் குடித்தொகையில் உட்படுவதுடன் மாதிரிகளாக 8 பாடசாலைகளின் அதிபர்களும், 41 ஆசிரியர்கள், கோட்டக் கல்விப்பணிப்பாளர், 16 பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்கள், 123 ஆரம்பப்பிரிவு மாணவர்கள் போன்றோர் மாதிரிகளாகத் தெரிவாகினர். அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள், பாடசாலை அபிவிருத்திச் சங்க உறுப்பினர்கள் போன்றோரிடம் பெற்ற தரவுகள், தகவல்கள் யாவும் பகுப்பாய்வுக்கு உட்படுத்தப்பட்டன. இவ்வாய்வின் தரவுப் பகுப்பாய்வு முறைகளாக அளவறிசார் முறையும், பண்பறிசார் முறையும் பயன்படுத்தப்பட்டுள்ளதோடு, பகுப்பாய்வுக்கு உதவியாக கணனி மென்பொருட்கள் பயன்படுத்தப்பட்டதன் மூலம் நேர்த்தியான நம்பகமான பகுப்பாய்வாக அமைந்துள்ளதும் குறிப்பிடத்தக்கது.

## 8. தரவுப் பகுப்பாய்வு

மொழித்திறன் விருத்தியின்மையால் கற்றலில் இடர்படும் மாணவர்கள், மொழித்திறன் பின்தங்கியிருப்பதற்கான காரணங்கள், பாடசாலை, பெற்றோரின் பங்களிப்புக்கள், மொழித்திறன் விருத்திக்காக ஆசிரியர்கள் அர்ப்பணிப்புடன் செயற்படும்போது எதிர்கொள்ளும் சவால்கள், போன்றவற்றைக் கண்டறியும் நோக்குடன் தரவுகள் சேகரிக்கப்பட்டு பகுப்பாய்வு செய்யப்பட்டுள்ளது.

இதன்படி அதிபர்களின் கருத்துக்களூடாக அறியப்பட்ட விடயங்களாவன ஆய்வுக்காகத் தெரிவு செய்யப்பட்ட பாடசாலைகளில் 75% ஆசிரியர்களின் செயற்பாடுகள் மொழித்திறனை விருத்தி செய்யும் வகையில் திருப்திகரமாக இருப்பதாகவும் 25% ஆசிரியர்களின் செயற்பாடுகள் மொழித்திறனை விருத்திசெய்வதற்கு போதுமானதாக அமையாதுள்ளமையும் அதிபர்கள் சுட்டிக்காட்டியுள்ளனர் (உரு 1).




**உரு 1** ஆசிரியர்களின் செயற்பாடு

சில ஆசிரியர்களால் முழுமையாக ஒத்துழைப்பு வழங்க முடியாமைக்கான காரணங்களாக, பெரும்பாலான ஆசிரியர்கள் தூரப் பிரதேசத்திலிருந்து நாளாந்தம் வருகை தருகின்றமையினால் அதிகளவு நேரத்தை பயணங்களில் செலவு செய்கின்றனர். மாணவர்கள் கற்றலில் அசமந்தப் போக்கை வெளிக்காட்டுவதாலும் வினைத்திறனான கற்றலுக்கு போதுமானளவு வளங்கள் இல்லாமை போன்ற காரணங்களினால் சில ஆசிரியர்களால் பூரண ஒத்துழைப்பு வழங்கமுடியாதுள்ளமையை அதிபர்கள் இனங்காட்டியுள்ளனர்.

இவ்வாறே பாடசாலைகளிலும், வகுப்பறைகளிலும் வினைத்திறனான கற்றல் செயற்பாடுகளை சிறப்பாக முன்னெடுப்பதற்குப் போதியளவு வளங்கள் இல்லாதுள்ளமையினை 75% அதிபர்கள் எடுத்துக்காட்டியுள்ளனர் (உரு2).




**உரு . 2** கற்பித்தலுக்கான வளங்கள்

இதே போல் ஆசிரியர்களின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன, வகுப்பறையில் அனேகமான மாணவர்கள் மொழித்திறன் விருத்தியின்மையால் கற்ற லில் இடர்படுவதாக 88% ஆசிரியர்கள் இனங்காட்டி யுள்ளனர் (உரு.3).




**உரு. 3** வகுப்பில் கற்றலில் இடர்படும் மாணவர்கள்

இந்நிலையில் மாணவர்களின் மொழித்திறன் பின் தங்கியிருப்பதற்கான காரணங்களில் 78% வீட்டுச் சூழல் காரணி செல்வாக்குச் செலுத்துவதாகவும், 22% பாடசாலைச் சூழல் காரணி செல்வாக்குச் செலுத்துவ தாகவும் அறியமுடிந்துள்ளது.




**உரு. 4** மொழித்திறன் பின்தங்கியிருப்பதற்கான காரணங்கள்

வீட்டுச் சூழல் காரணங்களாக, பிள்ளைகள் வீடுகளில் கற்பதற்கான அடிப்படை வசதிகள் இல்லாமை, பெற்றோர் கல்வி பற்றிய அக்கறை செலுத்தாமை, அதேபோல் பாடசாலைக் காரணிகளாக கற்றல் கற்பித்தலை சிறப்பாக மேற்கொள்வதற்கு போதுமானளவு பௌதீக வளங்கள், கற்பித்தற் துணைச் சாதனங்கள், போதுமான இடவசதிகள் போன்றன இல்லாதுள்ளமையையும் ஆசிரியர்கள் இனங் காட்டியுள்ளனர்.

இதைவிட மாணவர்களின் செயற்பாடுகளை அறிந்து கொள்ளும் பொருட்டு கீழ்வரும் வினா வினாவப்பட்ட போது, மொழித்திறனை விருத்தி செய்யும் செயற்பாடுகளில் மாணவர்களின் ஒத்துழைப்பானது மிகக் குறைந்தளவே காணப்படுவதாக ஆசிரியர்கள் இனங்காட்டியுள்ளார்கள். இங்கு 49% மாணவர்கள் பயிற்சிகளையும், வீட்டு வேலைகளையும் முடிப்பதில் அக்கறையற்ற நிலையில் காணப்படுவதாக அறிய முடிந்துள்ளது.




**உரு. 5** மொழித்திறனை விருத்தி செய்யும் செயற்பாடுகள்

இந்த வகையில் ஆசிரியர்கள் பின்வரும் தேவைகளை இனங்காட்டியுள்ளனர்.

- மொழி விருத்திக்குக் குறிப்பிட்ட பாடவேளை போதாமை.
- மேலதிகமாக ஒரு நாளைக்கு ஒரு பாடவேளை யாவது தேவை.
- பெற்றோரும், மாணவர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டும்
- பிள்ளைகள் நூல்களைப் பெற்று வாசிக்கக்கூடிய வகையிலான நூலக வசதி அவசியம்
- மொழித்திறனை விருத்தி செய்யும் வகையிலான தமிழ்த்தினப் போட்டிகள் அடிக்கடி நடத்தப்படுதல் வேண்டும்.

இதேவேளை எல்லாச் செயற்பாடுகளுக்கும் பாடசா லையும், பெற்றோர்களும் பூரண ஒத்துழைப்பு வழங்க வேண்டியதன் அவசியத்தையும் வலியுறுத்தினார்கள்.

மேலும் மொழித்திறன் குறைபாடுடைய மாணவர் களுக்கு வகுப்பறையில் எவ்வாறான பயிற்சிகளை வழங்கு கின்றீர்கள்? என வினவப்பட்டதற்கு பின்வரும் பயிற்சிகள் வழங்கப்படுவதாக குறிப்பிட்டுள்ளனர்.

- எழுத்துக்களை இனங்காணல் பயிற்சி
- எழுத்துக்களின் ஒலி வேறுபாடு தொடர்பான பயிற்சி
- எழுத்துக்களைச் சரியாக உச்சரிக்கும் பயிற்சி

- திருத்தமான எழுத்து, வாசிப்பு போன்றவற்றுக்கான பயிற்சி

இதே போல் மாணவர்களின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன வீட்டில் மொழித்திறன் தொடர்பான பயிற்சிகள் 16% ஆன மாணவர்களின் வீடுகளில் மட்டுமே தினமும் வழங்கப்படுவதாகவும், 84% மாணவர்களின் வீடுகளில் அவ்வாறான பயிற்சியோ, வழிகாட்டல்களோ வழங்கப்படாதுள்ளமையும் அறிய முடிந்துள்ளது (உரு.6). இதற்கு வீட்டில் கல்வி கற்ற முன்மாதிரி இல்லாதுள்ளமை காரணங்களாக அமைகின்றது.




**உரு.6** மொழித்திறன் பயிற்சிகள்

இதே போல் பாடசாலை அபிவிருத்திச்சங்க உறுப்பினர்களின் கருத்துக்களினூடாக அறியப்பட்ட விடயங்களாவன ஆரம்பப்பிரிவு மாணவர்களில் 62% பெற்றோரில் குறைந்தபட்சம் தாய், தந்தை ஒருவரின் பராமரிப்புக் கிடைக்காமல் உள்ளமையைக் காட்டுகின்றது (உரு.7).




**உரு . 7** பெற்றோர் பராமரிப்பு

இவ்வாறு பிள்ளைகள் பெற்றோர்களுடன் வாழாமைக்கான காரணங்களாக, யுத்தத்தால் பெற்றோரை இழந்திருத்தல், தாய், தந்தையர் இருவரும் பிரிந்திருத்தல், வறுமை நிமிர்த்தம் வெளிநாடு சென்றிருத்தல் போன்றவற்றை இனங்காட்டியுள்ளனர்.

**9. ஆய்வு கண்டுபிடிப்புக்களும் சிபாரிசுகளும்**

ஆய்வுக்குட்படுத்திய பாடசாலை மாணவர்களில் பெரும்பாலானோர் முன்பள்ளிக் கல்வியை பெறாதவர்களாகவும், ஆரம்ப மொழிவிருத்தி குன்றியவர்களாகவும் இருப்பதனால் வகுப்பறையில் எழுத, வாசிக்கத் தெரியாத நிலையில் கற்றலில் ஆர்வமின்றியும் கற்றற் செயற்பாடுகளில் இடர்பாடுகளை எதிர்கொள்பவர்களாகவும் காணப்படுகின்றனர்.

இப்பிரதேசப் பெற்றோர் கல்வியறிவு குறைந்தவர்களாக இருப்பதனால் வீட்டில் மொழித்திறன் பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும் பிள்ளைகள் பெற்றுக் கொள்வதற்கான சந்தர்ப்பங்கள் குறைவாகவே உள்ளது.

பிள்ளைகள் வசிக்கும் வீட்டில் கற்பதற்கான அடிப்படை வசதிகள் இல்லாமை, கல்விக்கான போதிய ஒத்துழைப்பை பெற்றோர் வழங்காமை போன்றவற்றால் மாணவர்கள் ஆரம்பக் கல்விச் செயற்பாடுகளில் பாரிய இடர்பாடுகளை எதிர்நோக்குகின்றனர்.

மாணவர்களில் பெரும்பாலானோர் எழுத, வாசிக்கத் தெரியாத நிலையில் கற்பித்தலைச் சிறப்பாக முன்னெடுப்பது ஆசிரியர்களுக்கு சிரமமாகக் காணப்படுகின்றது. இருந்த போதிலும் மாணவர்களின் மொழித்திறனை மேம்படுத்தும் வகையில் பாடசாலை நேரத்தின் பிற்பாடு ஆசிரியர்கள் மேலதிக செயற்பாட்டில் ஈடுபடுகின்றனர்.

கற்பித்தலுக்கான துணைச்சாதனங்கள் இல்லாத சந்தர்ப்பங்களிலும் ஆசிரியர்கள் மொழித்திறனை விருத்தி செய்யும் வகையில் செயற்பாடுகளை வடிவமைத்து முன்னெடுத்துச் செல்கின்றமை சிறப்பான விடயமாகக் காணப்படுகின்றது.

மாணவர்களில் பெரும்பாலானோர் மொழித்திறனில் பின்தங்கியிருப்பதோடு, கற்றலில் இடர்பாடுகளை எதிர்கொள்வதால் ஆசிரியர்களின் வினைத்திறனான கற்பித்தலுக்கு தடையை ஏற்படுத்தியுள்ளது.

இப்பிரதேசப் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்கள், மாணவர்கள் பெற்றோர்கள், சமூகம் போன்றவர்களுக்கு ஆரம்பக் கல்வியின் முக்கியத்துவத்தினை உணர்த்துவதுடன், பெற்றோர்கள் பிள்ளைகளின் கல்வியில் அக்கறையுள்ளவர்களாக இருப்பதற்கான வழிமுறைகளையும் எடுத்துரைத்தல்.

சகல பிள்ளைகளும் மொழித்திறன் விருத்தியைப் பெறும் வகையில் அரசசார்பற்ற நிறுவனங்களின் உதவியைப் பெற்றுக் கொடுத்தல்.

பிள்ளைகள் ஆரம்பத்தில் மொழித்திறனை பெற்றுக் கொள்ளும் வகையில் முன்பள்ளிகளை சிறப்பாக முன்னெடுத்தல்

எழுத, வாசிக்கத் தெரியாத பிள்ளைகளை இனங்கண்டு ஒவ்வொரு ஆசிரியர்களும் இரண்டு பிள்ளைகளைப் பொறுப்பெடுத்து எழுத, வாசிக்கக் கற்றுக் கொடுத்தல் வேண்டும்.

மாணவர்கள் விருப்பத்துடன் கற்கும் வகையிலும், சுய கற்றலை அதிகரிக்கும் வகையிலும், அதிபர், ஆசிரியர், மாணவர், பெற்றோர்கள் இணைந்த வகையில் செயற்றிட்டங்களையும், செயற்பாடுகளையும் நடை முறைப்படுத்த வேண்டும்.

மொழி விருத்தி பின்தங்கியுள்ள பிள்ளைகளுக்கு பெற்றோரும், பழைய மாணவர்களும் மாலை நேரங்களில் மேலதிக வகுப்புக்களையும் அதற்கான பயிற்சிகளையும், வழிகாட்டல்களையும் வழங்குதல் வேண்டும்.

மாணவர்களுக்கு ஆரம்ப காலத்திலிருந்தே மொழித் திறன் விருத்திக்கான பிரத்தியேகச் செயற்றிட்டங்களை நடைமுறைப்படுத்த வேண்டும்.

## 10. முடிவுரை

உலகில் எந்தவொரு சமூகமும் கல்வி மூலம் அபிவிருத்தியை நோக்கி செல்லவே முயற்சிக்கின்றன. ஆரம்பப்பிரிவு மாணவர்களின் செயற்பாடுகளுக்கும், விருத்திக்கும் உந்து சக்தியாக அமைபவர்கள் ஆசிரியர்களும், பெற்றோர்களுமாவர். இப்பிரதேசப் பெற்றோர்கள் கல்வியறிவு குறைந்தவர்களாக இருப்பதனாலும், வறுமையின் நிமிர்த்தம் பிள்ளைகளின் கல்விக்கு பூரண ஒத்துழைப்பு வழங்க முடியாதுள்ளதனால் கல்வி தொடர்பாக குறைந்த அளவிலான பங்களிப்பையே செய்வதனை ஆய்வின் மூலம் கண்டறியப்பட்ட பல செயற்பாடுகள் எடுத்துக்காட்டுகின்றது.

இந்நிலையில் பிள்ளைகளின் மொழித்திறனை விருத்தி செய்வதில் ஆசிரியர்களின் அர்ப்பணிப்பும், செயற்பாடுகளும் சிறப்பாக அமைய வேண்டியது கட்டாயமானதாகும். வெளிப்பிரதேசத்திலிருந்து வரும் ஆசிரியர்கள் மாலை நேரப் பயிற்சிகளை வழங்க முன்வருகின்ற போதிலும் குறிப்பிட்ட சில மாணவர்களைத் தவிர ஏனைய மாணவர்கள் சமூகமளிக்காத நிலையில் மாணவர்களின் பூரண ஒத்துழைப்பை ஆசிரியர்களால் பெற்றுக் கொள்ள முடியாமல் உள்ளது.

இதனால் மாணவர்கள் தொடர்ச்சியாக எழுத, வாசிக்கத் தெரியாத நிலையில் கற்றலில் ஓர் அசமந்தப் போக்கையே வெளிப்படுத்துவதனால் ஆசிரியர்கள் வினைத்திறனான கற்பித்தலை மேற்கொள்வதில் பெரும் சவாலை எதிர் நோக்குகின்றனர்.

இந்தவகையில் பெற்றோர்கள் கல்வி பற்றி விழிப்புடன் செயற்படுவதுடன் பிள்ளைகளின் கல்வியில் கூடியளவு பங்களிப்புச் செய்து அவர்களை ஊக்கப்படுத்துதல் வேண்டும். கற்பிக்கும் ஆசிரியர்களைச் சந்தித்து பிள்ளைகள் பற்றிய பதிவைப் பெற்றுக்கொள்வதோடு, பிள்ளையின் ஆரம்ப நிலையிலிருந்தே வீட்டில் மொழித்திறன் செயற்பாடுகளையும், பயிற்சிகளையும் மேற்கொள்வது அவசியமாகும். பாடசாலைகளும் போதுமான வளங்களை பெற்று சிறப்பாக செயற்படுவதுடன் ஆசிரியர், மாணவர்களுக்கான வசதி வாய்ப்புக்களையும் ஏற்படுத்திக் கொடுப்பதினூடாக ஆரம்பப்பிரிவு மாணவர்களின் மொழி விருத்தியை அபிவிருத்தி செய்து அவர்களை தொடர்ந்தேர்ச்சியாக கல்வியில் ஈடுபடுத்துவதன் மூலம் பிரதேச அபிவிருத்தியை ஏற்படுத்த முடியும்.

## உசாத்துணை நூல்கள்


[1] சந்திரசேகரன்.சோ, 2004, கல்வி ஒரு பன்முக நோக்கு, உமாபதிப்பகம்.

[2] கருணாநிதி.மா, 2008, கற்றல் கற்பித்தல் மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம்.

[3] இராஜேஸ்வரன்.ப, தனபாலன்.பா, 2005, தேசிய அபிவிருத்தியில் தமிழர் கல்வி, கல்வியல் வெளியீட்டு நிலையம்.

[4] சின்னத்தம்பி.க, கல்வி ஆய்வியல், 2007, ஜெயா இன்டர்நெஷனல் (பி)லி, கொழும்பு

- நுஃமான். எம், 2002 "ஆரம்ப இடைநிலை வகுப்புக்களில் தமிழ் மொழிக் கற்பித்தல்" ஒரு மொழியியல் அணுகுமுறை, கொழும்பு தமிழிச் சங்கம்.
- இராஜேஸ்வரன். ப, தனபாலன். பா, 2005, "தேசிய அபிவிருத்தியில் தமிழர்கல்வி"இ கல்வியல் வெளியீட்டு நிலையம்.
- ஜெயராசா.சபா, 2005, "குழந்தை உளவியலும் கல்வியும்", பூபாலசிங்கம் புத்தகசாலை.
- சின்னத்தம்பி. க, 2007 "கல்வி ஆய்வியல்", ஜெயா இன்டர்நெஷனல், கொழும்பு
- ஜெயராசா.சபா, 2007, "தாய்மொழிக் கல்வியும் கற்பித்தலும்" , முற்போக்கு கலை இலக்கிய பேரவை.
- சின்னத்தம்பி. க, சுவர்ணராஜா, 2007 "அறிகைத் தொழிற்பாடுகளும் ஆசிரியரும்", குரு வெளியீடு.
- கருணாநிதி.மா, 2008, "கற்றல் கற்பித்தல்" மேம்பாட்டுக்கான வழிமுறைகள், சேமமடு பதிப்பகம், கொழும்பு 11.
- தனபாலன். பா, 2008, ''நவீன கற்றல் கற்பித்தல் முறையியல்கள்", குமரன் புத்தக இல்லம்.